பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

18 05 2025 12 40

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மலேசியாவில் நடைபெறும் சர்வதேச கடல்சார் மற்றும் விமானக் கண்காட்சியில் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் தலைமையிலான பிரதிநிதிகள் குழு பங்கேற்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் இன்று நேரிட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

3. வேளாண்மை, பால்வளம் மற்றும் மீனவள செயல்பாடுகளில் தமிழகம் முன்னணி வகிப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. ரஷ்யா – யுக்ரைன் இடையே போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த நாளை பேச்சு நடத்த இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் ராஜஸ்தான் - பஞ்சாப் அணியையும், தில்லி – குஜராத் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கரின் பிறந்தநாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், சிறப்பான ஆரோக்கியத்தோடு பல ஆண்டுகள் திரு. தங்கர் நாட்டுக்கு சேவையாற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மாநிலங்களவையின் செயல்பாட்டுத் திறனை அதிகரித்ததில் திரு. ஜக்தீப் தங்கரின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார். பல ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றிய அனுபவத்தின் காரணமாக அரசியலமைப்பு தொடர்பான சிறப்பான புரிதலை திரு. தங்கர் கொண்டிருப்பதாக பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

திரு. ஜக்தீப் தங்கருக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் உள்ளிட்ட பல அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

மலேசியாவில் நடைபெறும் சர்வதேச கடல்சார் மற்றும் விமானக் கண்காட்சியில் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் தலைமையிலான பிரதிநிதிகள் குழு பங்கேற்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. அங்குள்ள லங்காவியில் வரும் 20ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை இக்கண்காட்சி நடைபெறுகிறது.

இதில் இந்தியாவின் சார்பாக அமைக்கப்படும் அரங்கை திரு. சஞ்சய் சேத் திறந்து வைக்கிறார்.

இந்தப் பயணத்தின்போது மலேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் டத்தோ **Seri Mohamed Khaled Bin Nordin** உடன் திரு. சஞ்சய் சேத் பேச்சு நடத்த உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைச்சரின் பயணம் அமையும் என்று அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் இன்று நேரிட்ட தீ விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

சார்மினார் அருகே குல்சார் ஹவுஸ் பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் இந்த தீ விபத்து நேரிட்டதாகவும், இதில் காயமடைந்தோர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

தீ விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற 11 தீயணைப்புக் குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை 16 பேர் தீ விபத்து நேரிட்ட கட்டடத்தில் இருந்து தீயணைப்புத் துறையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும், அது தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

விபத்து நேரிட்ட இடத்தை மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி நேரில் பார்வையிட்டு பாதிப்புக்குள்ளான குடும்பத்தினரிடம் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

விபத்து நேரிட்ட இடத்தில் மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே ஹைதராபாத் தீ விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து உயிரிழந்தோரின் குடும்பத்திருக்கு தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் மூவர்ணக் கொடி பேரணி நடைபெற்றது.

சத்தீஸ்கட் மாநிலம் ஜஸ்பூர் பகுதியில் நடைபெற்ற மூவர்ணக் கொடி பேரணிக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய் தலைமை வகித்தார்.

இதில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கோவாவில் நடைபெற்ற பேரணிக்கு அம்மாநில முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த் தலைமை வகித்தார்.

ஒடிசா மாநிலம் பூரியில் அம்மாநில துணை முதலமைச்சர் திருமதி பிரபாதி பரிதா தலைமையில் நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் பங்கேற்று தேசபக்தி முழக்கங்களை எழுப்பி சென்றனர்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் நடைபெற்ற பேரணியில் திரைப்பட நடிகை ஜெயப்பிரதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அப்போது பேசிய ஜெயப்பிரதா, நமது நாட்டைப் பாதுகாக்கும் பணியில் துணிச்சலுடன் செயல்படும் ராணுவ வீரர்களுக்கு நன்றியை தெரிவிக்கும் வகையில் இந்தப் பேரணி நடத்தப்படுவதாகக் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் பேரணி நடைபெற்றது.

கன்னியாகுமரியில் மாவட்ட பிஜேபி சார்பில் குமரி முனையில் உள்ள விவேகானந்தா கேந்திரம் முதல் காந்தி மண்டபம் வரை நடைபெற்ற பேரணியில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விருதுநகரில் பிஜேபி மாவட்டத் தலைவர் திரு. பாண்டுரங்கன் தலைமையில் நடைபெற்ற பேரணியில் பிஜேபி, அஇஅதிமுகவினரும், இஸ்லாமிய பெண்கள் உள்ளிட்டோரும் பங்கேற்று பாரத் மாதா கி ஜே என முழக்கமிட்டனர். பேரணியில் நிறைவில் பாகிஸ்தான் தாக்குதலில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், சமூக அடிப்படையிலான பாதுகாப்பை வலுப்படுத்தவும் முன்னாள் ராணுவ வீரர்களை ஈடுபடுத்த ஜம்மு-கஷ்மீர் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

முன்னாள் ராணுவ வீரர்களின் திறன்களை பயன்படுத்த வழிவகை செய்யும் என்று இத்திட்டத்தை முன்மொழிந்துள்ள ஜம்மு-கஷ்மீர் சைனிக் நலவாரியம் தெரிவித்துள்ளது.

இதன்படி 4 ஆயிரம் முன்னாள் ராணுவ வீரர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களில் 435 பேருக்கு உரிமம் பெற்ற ஆயுதங்கள் வழங்கப்பட உள்ளன.

இவர்கள் ஜம்மு-கஷ்மீரின் மின் நிலையங்கள், பாலங்கள், அரசு நிறுவனங்கள் உட்பட 20 மாவட்டங்களில் உள்ள முக்கிய இடங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அந்தந்த மாவட்ட சைனிக் நல அலுவலர்களின் ஒருங்கிணைப்பின்கீழ் இவர்கள் பணியாற்றுவார்கள் என்றும், இதன் மூலம் முன்னாள் ராணுவ வீரர்களின் அனுபவம் மற்றும் திறன்களை பயன்படுத்துவது மட்டுமல்லாமல், ஜம்மு-கஷ்மீரின் உள்ளூர் நிர்வாக கட்டமைப்புக்கு இது உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

வேளாண்மை, பால்வளம் மற்றும் மீனவள செயல்பாடுகளில் தமிழகம் முன்னணியில் இருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 4 ஆண்டுகளில் வேளாண்துறையின் வளர்ச்சி 5 புள்ளி ஆறு சதவீதமாக உயர்ந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் திட்டங்களால் கேழ்வரகு, கொய்யா உற்பத்தியில் தேசிய அளவில் தமிழகம் முதலிடம் வகிப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவு தானிய உற்பத்தி, பாசனப் பரப்பு அதிகரிப்பு, வேளாண் எந்திரங்கள் வழங்குதல் தொடர்பான மாநில அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு பெரும் பயனைத் தந்திருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மீனவர்களுக்கு உதவும் வகையில் ஆயிரத்து 428 கோடி ரூபாய் மதிப்பில் 72 மீன் இறங்கு தளங்களை புதிதாக ஏற்படுத்தியிருப்பதாவும் தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆன்லைன் மோசடி தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில் ஆன்லைன் மோசடி வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு வருவதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அம்மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. சரவணன், ஆன்லைன் மோசடி தொடர்பான புகார்களைத் தெரிவிக்க 1 9 3 0 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையே போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த நாளை பேச்சு நடத்த இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதளப் பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் மற்றும் யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கியுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை மேற்கொள்ள உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இப்போரில் ஒவ்வொரு வாரமும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய, யுக்ரைன் நாட்டு வீரர்கள் உயிரிழப்பது கவலைக்குரியதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது வர்த்தகம் தொடர்பான அம்சங்களும் விவாதிக்கப்படும் என்று திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நடைபெற்ற ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பேச்சுவார்த்தையில், கைதிகள் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

கேரளா, மாஹே, லட்சத்தீவுகள், கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு பரவலாக பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், ஆந்திரப்பிரதேசத்தின் கடலோரப் பகுதிகள், ராயலசீமா, ஏனாம், தெலங்கானா மற்றும் கர்நாடகாவின் உட்புற மாவட்டங்களில் பரவலாக அடுத்த 7 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒருசில பகுதிகளில் இன்று முதல் வரும் 20ஆம் தேதி வரை கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜம்மு, உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசத்தின் வடபகுதியில் வெப்ப அலை நீடிக்கக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் ஒருசில இடங்களில் இரவு வேளையில் வெப்பமான சூழல் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

தமிழகத்தின் ஒருசில இடங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

கிருஷ்ணகிரி அணை நிரம்பும் நிலையில் உள்ளதால் பாதுகாப்பு கருதி அதிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதாகவும், அதன் காரணமாக கரையோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

தில்லியில் இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் தில்லி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**